## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



கடவுள் சாஸ்வதமானவர். நேற்றும், இன்றும், நாளையும் ஒன்றுபோல் மாற்றமில்லாமல் இருப்பவர். எல்லா இடங்களிலும் இருப்பவர்.

ईशानो भूतभव्यस्य स एवाद्य उ श्यः।
ஈஶானோ பூ4தப4வ்யஸ்ய ஸ ஏவாத்3ய உ ஶ்ய:.

ஒவ்வொரு மனிதனும் அவர் மேல் பக்தி வைத்து, கீதை போன்ற சாஸ்த்ரங்களில் அவர் காட்டிய வழியில் வாழ்வதுதான் நல்லது, அவரைப் பல உருவங்களில் பூஜிக்கலாம். எல்லா உருவங்களும் அவருடையதுதான். அவர் பக்தனின் பக்தி விசேஷத்தைப் பொறுத்து அருளுகிறார்.

எல்லா இடங்களிலும் வ்யாபித்திருக்கின்ற கடவுளை கோயிலில் மட்டுமே எதற்காக பூஜிக்கவேண்டும்? அவர் கோயிலில் மட்டுந்தான் தோன்றுவாரா?' என்று சிலருக்கு ஸந்தேஹமுண்டாகலாம்.

கடவுள் எல்லா இடங்களிலும் நிறைந்திருந்தாலும் அவருடைய ப்ரபாவம், ஸான்னித்யம் ஆகியவை கோயிலிலுள்ள விக்ரஹத்திற்கு விசேஷமாக உள்ளது. கும்பாபிஷேகத்திற்குப் பிறகு பக்தனின் பக்தியை ஏற்றுக்கொள்ளும் சக்தி அந்த விக்ரஹத்திற்கு வந்துவிடுகிறது அதனால் அவர் மகிழ்ச்சியடைந்து பக்தனுக்கு அருள்பாலிக்கிறார். என்பதே இதற்கான பதில்.

இதைத்தான் ஸ்ரீஆதிசங்கரபகவத்பாதர் தமது பாஷ்யத்தில் सर्वगतोऽपिश्वरस्तत्रोपास्यमान: प्रसीदति । सर्वगतस्यापि ब्रह्मण उपासनार्थ: प्रदेशविशेषपरिग्र हो न विरुध्यते ।ஸர்வக3தோ(அ)பிஶ்வரஸ்தத்ரோபாஸ்யமான: ப்ரஸீத3தி |
ஸர்வக3தஸ்யாபி ப்3ரஹ்மண உபாஸனார்த2: ப்ரதே3ஶவிஶேஷபரிக்3ர ஹோ ந விருத்4யதே | என்று பல இடங்களில் விவரித்துள்ளார்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஆகையால் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கும் கடவுளை கோயிலில் வழிபடுவதில் தவறேதுமில்லை. மேலும்,

अर्चादानर्चयेत्तावदीश्वरं मां स्वकर्मकृत्।
यावन्नचेद स्वहदि सर्वभूतेष्ववस्थितम् ।।
அர்சாதா3னர்சயேத்தாவதீ3ஶ்வரம்' மாம்' ஸ்வகர்மக்ரு'த்.
யாவன்னசேத3 ஸ்வஹ்ருதி3 ஸர்வபூ4தேஷ்வவஸ்தி2தம் ..

என்று பகவானே பாகவதத்தில் கூறியுள்ளார்.

அதாவது, எல்லா ப்ராணிகளிலும் இருக்கும் என்னை எதுவரை ஒருவன் தனது ஹ்ருதயத்தில் உணரவில்லையோ அதுவரை தனது கர்மாக்களை அனுஷ்டித்துக்கொண்டு ஈச்வரனான என்னை விக்ரஹம் போன்றவற்றில் அவகாசத்திற்கேற்றபடி பூஜிக்கவேண்டும் என்று பகவான் கூறியுள்ளார்.


இதை நன்றாகப் புரிந்துகொண்டு உருவமற்ற ஈச்வரனை உருவ வடிவத்தில் பூஜை செய்து அவரது அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாக வேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்.

நன்றி - அம்மன் தரிசனம்

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அம்ருத துளிகள்

கஷ்டங்கள் வரலாம் என்ற காரணத்திற்காக சில மனிதர்கள் எந்த நல்ல காரியத்தையும் ஆரம்பிக்ககூட மாட்டார்கள். மற்ற சிலர் எடுத்த காரியத்தில் கஷ்டங்களைப் பார்த்து நடுவில் அதை கைவிட்டு விடுவார்கள். ஆனால் உத்தமமான மனிதர்கள் எந்த கஷ்டங்கள் வந்தாலும் எடுத்துக் கொண்ட அந்த நற்பணியை முடித்துவிடுவார்கள். பகவத்பாத சங்கரர் தர்மபிரசார காரியத்தை எடுத்துக் கொண்டார். அதில் எத்தனையோ கஷ்டங்கள் வந்தன. அந்த மாதிரி சமயத்தில் மனிதனுக்கு தைரியம் மிகவும் தேவையானது.


For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹாஸ்வாமிகள்)

## ஸ்ரீ வித்யையின் ஶக்தி

ஸ்ரீவித்யா தொடர்பான ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் வரும் பெயர்கள் –


அகுலா, ஆதிஶக்தி: இச்சாஶக்தி ஞானஶக்தி க்ரியாஶக்தி ஸ்வரூபிணீ, ஈ, உமா, ஒட்யாணபீடநிலயா, கதம்பவனவாஸினீ, காமாக்ஷீ, கிரிசக்ரதாரூட தண்டனாதாபுரஸ்க்ருதா, காமேஶ்வர முகாலோக கல்பித ஸ்ரீ கணேஶ்வரா, கராங்குலினகோத்பன்ன நாராயண தஶாக்ருதி: மற்றும் காமேஶ்வராத்ர நிர்தக்த ஸபண்டாஸுரஶூன்யகா

ஸௌந்தரியலஹரி, ஆர்ய ஶதகம், கடாக்ஷ ஶதகம் மற்றும் லலிதா ஸஹஸ்ரநாமம் ஆகிய அனைத்துமே ஸ்ரீவித்யை-யுடன் தொடர்புடையவை. பக்தர்கள் இந்த நூல்களை எல்லாம் படித்து ஸ்ரீதேவி மீதான பக்தியை அதிகரிக்க முடியும்.ஸ்ரீவித்யையின் சில முக்கியமான அம்சங்கள்/ நுணுக்-கங்கள் பின்வரும் பக்கங்களில், ஸ்ரீ தேவி பற்றிய பல்வேறு புத்தகங்களின் அடிப்படையில், தொகுக்கப் பட்டுள்ளன. ஸ்ரீ தேவியை வணங்குவதன் அர்த்தத்தையும் நோக்கத்தையும் இன்னும் தெளிவாக புரிந்து கொள்ள இது உதவியாக இருக்கும் என்று நம்பப் படுகின்றது.


ஸ்ரீவித்யா நடைமுறையின் படி (ஶைவ நடைமுறையில் கூட) தத்வங்கள் எண்ணிக்கையில் 36-ஆக எடுக்கப் பட்டுள்ளன. இதை மூன்று குழுக்களாகப் பிரிக்கலாம். கீழே உள்ள பட்டியல் அதை விவரிக்கின்றது. உண்மையில் இருப்பது ஆத்ம (ஸ்வய) தத்வத்தைக் குறிக்கின்றது. எனவே இது ஸத் தத்வம் என்றும் அழைக்கப் படுகின்றது. இதில் இருப்பவை –

| | |
|---|---|
| முதன்மை கூறுகள் | 5 |
| நுட்பமான கூறுகள் | 5 |
| செயலின் உறுப்புகள் | 5 |
| உணர்வு உறுப்புகள் | 5 |
| இயற்கை, அகங்காரம், புத்தி மற்றும் மனம் | 4 |
| மொத்தம் | 24 |
| மாயை, கலை, கல்வியறிவு, ஆசைகள், நேரம், விதிகள் மற்றும் புருஷ (அறிவைக் குறிக்கும் வித்யாத்வத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே இது சித் தத்வம் என்றும் அழைக்கப்படுகின்றது). | 7 |
| ஶிவபெருமான், ஶக்தி, சதாஶிவர், ஈஶ்வரர் மற்றும் ஶுத்த வித்யா (இரட்சிப்பைக் குறிக்கும் ஶிவ தத்துவத்தின் அடிப்படையில். இது ஆனந்த தத்வம் என்றும் அழைக்கப் படுகின்றது) | 5 |
| மொத்தம் | 36 |

(தொடரும்…)



Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

## 6. ராமேசுவர யாத்திரை



அங்கிருந்து புறப்பட்டு சாமராஜநகரம், குண்டலப்பேட்டை, ஹெக்கடதேவன் பேட்டை, எடத்துரை, ஹூணசூர், அரகல்கூடு, மடகேரி, பாகமண்டலம் மார்க்கமாக காவேரி உற்பத்தி ஸ்தானமான தலைக்காவேரிக்குப் போய் ஸ்நாநம் செய்து தங்க நாணயங்களால் காவேரி அம்மனை பூஜை செய்து விசேஷமாக பிராஹ்மண ஸந்தர்ப்பணாதிகள் செய்து வைத்தார்கள். அங்கிருந்து யாத்திரைக் கிரமமாக பச்சிமவாஹிநீ வந்து, தன் குருநாதருடைய ஆராதனையை நடத்தினார்கள். அங்கு மஹாராஜா சாமராஜ பிரபுக்கள் வந்து தர்சனம் செய்து திரும்பினார்கள். பச்சிமவாஹிநீயிலிருந்து மண்டயம், மத்தூர், சிவசமுத்திரம், கொள்ளேகாலம், சாமராஜ நகரம் மார்க்கமாக கணவாய் இறங்கி ஸத்தியமங்கலம் வந்து, அங்குள்ள தன் மடத்திலேயே சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் நடத்தினார்கள். சாதுர்மாஸ்யம் பூர்த்தியானவுடன் கோபிசெட்டிப்பாளையம் போய் அங்கு நவராத்திரி மஹோத்ஸவத்தை நடத்தினார்கள். அவ்வூரில் சிவக்கொழுந்து முதலியார் என்றதோர் பக்தரால் பிரார்த்திக்கப்பட்டு அவரால் ஏற்படுத்தப்பட்ட தேவாலயத்தில் வைதிக ரீதியாய் ஸ்ரீஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியை பிரதிஷ்டை செய்வித்து தானும் நேரில் விஜயம் செய்து விசேஷமாக ஸாந்நித்யம் ஏற்படும்படி செய்தார்கள்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

அங்கிருந்து புறப்பட்டு பவானி, ஈரோடு, கரூர் முதலான கிராமங்களில் அங்கங்குள்ள ஜனங்களின் பிரார்த்தனைக்கு இணங்கி ஸஞ்சாரம் செய்துகொண்டு வந்ததில், திருச்சிராப்பள்ளி ஜில்லா அய்யம்பாளையத்திலுள்ள மிகவும் ஆஸ்திகரும் தனிகருமான தாண்டவராயப் பிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்கி அவ்வூருக்கு விஜயம் செய்தார்கள். அங்கே போய்ச் சேர்ந்த மறுநாள் அந்த பக்தர் தண்டாயுதபாணியான ஸுப்ரஹ்மண்யருக்கு விசாலமாக ஓர் ஆலயம் கட்ட உத்தேசிப்பதாகவும், அதற்கு ஸ்ரீஸ்வாமிகளவர்களே அஸ்திவாரக் கல் ஊன்றி அனுக்ரஹிக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்துக் கொண்டார். அப்படியே விஜய வருஷம் சைத்ர சுக்ல சப்தமியில் (24-3-1893) நித்யாஹ்னிகம் பூஜாதிகளை முடித்துக்கொண்டு அந்த ஸ்தலத்திற்குப் போய் ஸம்ஸ்தானச் செலவிலேயே கணபதி பூஜை முதலான கார்யங்களை பிராஹ்மணர்கள் மூலமாக நடத்தி அபிஜிந்முஹூர்த்தத்தில் அஸ்திவாரச் சிலையை ஸ்தாபனம் செய்தார்கள். ஏற்படும் ஆலயத்தில் விஷ்ணு மூர்த்தியையும், பார்வதீ பரமேசுவர மூர்த்திகளையும் கூட பிரதிஷ்டை செய்யும்படிக்கும், தாம் ஸேது யாத்திரை செய்து திரும்புவதற்குள் பிரதிஷ்டை செய்வதற்கு வேண்டிய அனுகூலங்களை ஸித்தப்படுத்தும்படிக்கும் ஆக்ஞை செய்தார்கள்.

அங்கிருந்து புறப்பட்டு கோயமுத்தூர் ஜில்லா கொழுமம் என்ற வரதராஜபுரம் போய் அங்கே அவ்வருஷ சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை நடத்தினார்கள். பிறகு ஸமீபத்திலுள்ள கடத்தூர் என்ற அக்ரஹாரத்தில் நவராத்திரி உத்ஸவத்தை நடத்திவிட்டு ஸுப்ரஹ்மண்ய க்ஷேத்திரமாகிய பழனீ வந்தார்கள். அங்கு சில நாள் வாஸம் செய்து தன் கையினால் தண்டாயுதபாணிக்கு விசேஷ பூஜைகள் செய்து, அங்கிருந்து திண்டுக்கல் மார்க்கமாக மதுரைக்கு விஜயம் செய்தார்கள். முன் வழக்கத்தை யனுஸரித்து ஸ்ரீ மீனாக்ஷீஸுந்தரேசுவரர் ஆலயத்தில் கல்யாண மண்டபத்தில் ஜாகை வைத்துக்கொண்டார்கள். ராமனாதபுரம் ஜமீன்தாரான பாஸ்கர ஸேதுபதியவர்கள் மதுரைக்கு வந்து ஸ்ரீஸ்வாமிகளவர்களை புஷ்பங்களால் அழகாக அலங்கரிக்கப்பட்ட தங்கப் பல்லக்கில் ஆரோஹணம் செய்வித்து மஹாவிபவத்துடன் உத்ஸவம் நடத்தி ஆபால விருத்தர்கள் தர்சனம் செய்து ஆனந்திக்கும்படி செய்தார்கள். அப்படியே ஸேது யாத்திரையை முடித்துக்கொண்டு ராமனாதபுரம் வந்து தன்னை அனுக்ரஹிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்படியே ராமனாதபுரம் ஸம்ஸ்தான எல்லையில் பிரவேசம் செய்தது முதல் வேண்டிய ஸௌகர்யங்கள் யாவற்றையும் அந்த ராஜனே செய்துகொடுத்தார். தனுஷ்கோடி சென்று அங்கே மூன்றுநாள் தங்கி ஸேது ஸ்நாநம், ஸம்ஸ்தான வழக்கப்படி ஏற்பட்ட இதர தான தர்மங்கள் எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு ராமேசுவரம் வந்து அங்கு ஸ்ரீ ராமநாத ஸ்வாமிக்கு தாமே விசேஷமாக பூஜை செய்து அங்குள்ள சிஷ்யர்களுக்கு அனுக்ரஹம் செய்துவிட்டு ஸேதுபதியின் பிரார்த்தனைப் பிரகாரம் ராமனாதபுரம் வந்து அங்கேயே சாதுர்மாஸ்ய ஸங்கல்பம், நவராத்திரி உத்ஸவம் இவைகளை நடத்தினார்கள்.

(தொடரும்…)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ॥ श्रीगणेशभुजङ्गम् ॥

.. ஶ்ரீக³ணேஶபு⁴ஜங்க³ம் ..

रणत्क्षुद्रघण्टा निनादाभिरामं चलत्ताण्डवोद्दण्डवत्पद्मतालम् ।
लसत्तुन्दिलाङ्गो परिव्यालहारं गणाधीशमीशानसूनुं तमी डे ॥ १ ॥

ரணத்க்ஷுத்³ரக⁴ண்டா நிநாதா³பி⁴ராமம்' சலத்தாண்ட³வோத்³த³ண்ட³வத்பத்³மதாலம் |
லஸத்துந்தி³லாங்கோ³ பரிவ்யாலஹாரம்'
க³ணாதீ⁴ஶமீஶானஸூனும்' தமீ டே³ ||1 ||

रणत्क्षुद्रघण्टा निनादाभिरामं {ரணத்க்ஷுத்³ரக⁴ண்டா நிநாதா³பி⁴ராமம்} = ஒலியிடுகின்ற சிறுமணிகளின் இனிய ஸ்வரங்களால் மிகுந்த மகிழ்ச்சியை உண்டுபண்ணுகின்றவரும் (வசீகரமான தோற்றத்தைப் பெற்றவரும்); चलत्ताण्डवोद्दण्डवत्पद्मतालम् சலத்தாண்ட³வோத்³த³ண்ட³வத்பத்³மதாலம்} = அசைகின்ற நடன சமயத்தில் உயர்த்திய தண்டத்துடன்கூடிய தாமரைகளின் தாளத்தையுடையவரும்; लसत्तुन्दिलाङ्गो परिव्यालहारं {லஸத்துந்தி³லாங்கோ³ பரிவ்யாலஹாரம்} = மிளிர்கின்ற பருத்த உடலின்மேல் படிந்துள்ள பாம்புகளாகிய மாலையையுடைய வரும்; ईशानसूनुं {ஈஶானஸூனும்} = சிவபெருமானின் திருக்குமாரருமான ते गणाधीशम् {தே க³ணாதீ⁴ஶம்} = அக்கணேசப் பெருமானை ईडे {ஈடே³} = துதிக்கின்றேன்.

ஶ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான ஶ்ரீ ஜகத்குரு வல்லமையுடைய சங்கராசார்ய ஸ்வாமிகள் இடையூறுகளனைத்தையும் நீக்கி சகல மனோரதங்களையும் நிறைவேற்றும் விநாயகக் கடவுளை இவ்வாறாகப் போற்றுகின்றார். சர்வேச் வரனுடைய திருக்குமாரன் ஆனந்ததாண்டவம் புரிகின்றார். நடனம் செய்கின்றவனுக்குத் தக்க பக்க வாத்யங்கள் இன்றியமையாதவை. ஆகவே அது சமயம் அவர் அணிந்துள்ள சிறு மணிகள் இனிய ஒலியை எழுப்புகின்றன. அவர் கையிலுள்ள தண்டுடன் கூடிய தாமரை இங்குமங்கும் அசைந்து தாளம் போடுகின்றன. நடனமாடுபவன் தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு மேடையில் காட்சியளிப்பான். அதேபோல சிவபெருமானின் திருமகனும் தன் பருத்த உடலை ஸர்பஹாரத்தால் ஒளி மிளிரச் செய்து கொண்டு இன்னிசை முழங்க ஆனந்த நடனமாடுவது குறிப்பிடத்தக்கது. கணேச்வரனை இங்கு ஈசானஸூனு என்று கூறுவது மிகவும் பொருத்தமானது. "ஆத்மா வை புத்ரநாமாஸி" என்று மறைகள் கூறுகின்றன. மகன் தந்தையின் குணங்களைப் பெறுதல் இயற்கையே. நடனக் கலைக்கு குரு சிவபெருமான். அக்கலையைத் தனயனும் பெற்றுச் சீருடன் விளங்குவது இங்கு ஈசானஸூனு என்பதால் காட்டப்படுகின்றது. ஈசபுத்திரரின் ஆனந்தநிலை இங்கு நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்நிலையில் அவனை வழிபடுவதால் சகல சித்திகளும் கிடைக்குமென்பது திண்ணம்.

(தொடரும்)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# || श्री मीनाक्षी स्तोत्रम् ||

ஸ்ரீ மீனாக்ஷி ஸ்தோத்ரம்

(ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் உள்ள ஸ்தோத்திரம்.)



चराचरं जगत्सर्वं यस्याः पादसमुद्भवम् ।
नमस्तस्यै सुमीनाक्ष्यै देव्यै मङ्गलमूर्तये ||१२||

ஸராசரம்’ ஜக³த்ஸர்வம்’ யஸ்யா: பாத³ஸமுத்³ப⁴வம் .
நமஸ்தஸ்யை ஸுமீனாக்ஷ்யை தே³வ்யை மங்க³லமூர்தயே ||12||

சராசரமான இந்த உலகம் முழுவதும் எந்த அம்பாளின் பாதத்திலிருந்து உண்டாயிற்றோ? அந்த தேவியும், மங்களத்தையே உருவமாகக் கொண்டவளும். ஆன ஸ்ரீ மீனாக்ஷிக்கு நமஸ்காரம்.

इति स्तुत्वा महादेवीं प्रणम्य च पुनः पुनः ।
अनुज्ञया सुमीनाक्ष्याः प्रार्थयामास कन्यका ||१३||

இதி ஸ்துத்வா மஹாதே³வீம்’ ப்ரணம்ய ச புன: புன: .
அனுஜ்ஞயா ஸுமீனாக்ஷ்யா: ப்ரார்த²யாமாஸ கன்யகா ||13||

मातस्तव पदध्याने मनो निश्चलमस्तु मे ।
इदमेव वरं मुख्यं अपरैः किं प्रयोजनम् ||१४||

மாதஸ்தவ பத³த்⁴யானே மனோ நிஶ்சலமஸ்து மே .
இத³மேவ வரம்’ முக்²யம்’ அபரை: கிம்’ ப்ரயோஜனம் ||14||

என்று ஸ்ரீ சிறந்த தேவியை ஸ்தோத்திரம் செய்து, பலமுறை நமஸ்கரித்து, ஸ்ரீ மீனாக்ஷியின் ஆக்ஞையின் பேரில் அக்கன்னிகை ஏ அம்மா! தங்கள் பாதங்களை தியானம் செய்வதிலேயே என் மனம் சஞ்சலமின்றி இருக்கட்டும். இதுவே என் முக்யமான வரம், மற்றவைகளால் என்ன ப்ரயோஜனம்.

इति संप्रार्थिता देवी कन्यया सर्वमङ्गला ।
कन्या रूपा कन्यकां च प्राह कोकिलबगिरा ||१५||


இதி ஸம்ப்ரார்தி²தா தே³வீ கன்யயா ஸர்வமங்க³லா .
கன்யா ரூபா கன்யகாம்’ ச ப்ராஹ கோகிலப³கி³ரா ||15||

இவ்விதம் கன்னிகையால் ப்ரார்த்திக்கப்பட்ட, ஸர்வமங்களையுடன், கன்யா ரூபமாகவும் உள்ள அந்த தேவியானவள், அக்கன்னிகையை, கோகிலத்தின் போன்ற குரலால் என் ஸ்வரூபத்தை தியானம் செய்வதில் உன் மனம் ஸ்திர மாக இருக்கட்டும், என்று சொன்னாள்.

तवास्तु मनसस्थैर्य मम रूपस्य शीलने ||१६||


தவாஸ்து மனஸஸ்தை²ர்ய மம ரூபஸ்ய ஶீலனே ||16||

ஸ்ரீ மீனாக்ஷி ஸ்தோத்திரம் முற்றிற்று.



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## श्रीमन्नारायणीयम्

### ஶ்ரீமந்நாராயணீயம்

### पंचमं दशकम्

பஞ்சமம்' த³ஶகம் விராட்புருஷ உற்பத்தி

तत्रासौ त्रिगुणात्मकोऽपि च महान् सत्त्व प्रधानः स्वयं
जीवेऽस्मिन् खलु निर्विकल्पमहमित्युद्बोध निष्पादकः ।
चक्रेऽस्मिन् सविकल्प बोधकमहं तत्त्वं महान्खल्वसौ
सम्पुष्टं त्रिगुणैः तमोऽतिबहुलं विष्णो भवत् प्रेरणात् ||५||

தத்ராஸௌ த்ரிகு³ணாத்மகோ(அ)பி ச மஹான் ஸத்த்வ ப்ரதா⁴ன: ஸ்வயம்'
ஜீவே(அ)ஸ்மின் க²லு நிர்விகல்பமஹமித்யுத்³போ³த⁴ நிஷ்பாத³க: .
சக்ரே(அ)ஸ்மின் ஸவிகல்ப போ³த⁴கமஹம்' தத்த்வம்' மஹான்க²ல்வஸௌ
ஸம்புஷ்டம்' த்ரிகு³ணை: தமோ(அ)திப³ஹுலம்' விஷ்ணோ ப⁴வத் ப்ரேரணாத் ||5||



ஓ குருவாயூரப்பா! இந்த மஹத் தத்வமானது, ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குண ரூபமாக இருந்தாலும், ஸத்வ குண ப்ரதானமாக இருந்து கொண்டு, ஜீவனிடத்தில் மனுஷ்யத்வாதி பேதமற்ற, நான் என்ற ஞானத்தை உண்டு பண்ணுகிறது. இதே மஹத்தத்வம் த்ரிகுணாத்மகமாயிருந்தபோதிலும் தமோ குணம் மேலிட்டதாய் ஜீவனிடத்தில் 'நான் மனுஷ்யன்' என்ற பேத ஞான ஜனகமான அஹங்காரத்தை உண்டு பண்ணுகிறது. ஹே குருவாயூரப்பா என் வியாதியை போக்கு.

सोऽहं च त्रिगुणक्रमात् त्रिविधतामासाद्य वैकारिको
भूयस्तैजस तामसाविति भवन्नाद्येन सत्त्वात्मना ।
देवानिन्द्रिय मानिनोऽकृत दिशावातार्क पाश्यश्विनो
वह्नीन्द्राच्युत मित्रकान् विधुविधि श्रीरुद्र शारीरकान् ||६||

ஸோ(அ)ஹம்' ச த்ரிகு³ணக்ரமாத் த்ரிவித⁴தாமாஸாத்³ய வைகாரிகோ
பூ⁴யஸ்தைஜஸ தாமஸாவிதி ப⁴வந்நாத்³யேன ஸத்த்வாத்மனா .
தே³வானிந்த்³ரிய மானினோ(அ)க்ரு'த தி³ஶாவாதார்க பாஶ்யஶ்வினோ
வஹ்னீந்த்³ராச்யுத மித்ரகான் விது⁴விதி⁴ ஶ்ரீருத்³ர ஶாரீரகான் ||6||

ஓ குருவாயூரப்பா! கீழ்சொன்ன அஹங்காரம், தான் உண்டான உடனே, வரிசைப்படி ஸாத்விக அஹங்காரம், ராஜஸ அஹங்காரம் (அல்லது வைகாரிகம்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ராஜஸம், தாமஸம்) என்று மூன்று தன்மையை அடைகிறது. அவற்றுள் முதலாவதான வைகாரிக அஹங்காரமானது இந்திரியாபிமானி தேவதைகளான திக்குகள், வாயு, ஸூர்யன், வருணன், அஸ்வினிதேவர், அக்னி, இந்த்ரன், மித்ரன், ப்ரஜாபதி, சந்த்ரன், பிரம்மா, ஸ்ரீ ருத்ரன், க்ஷேத்ரக்ஞன் முதலியோர்களை ஸ்ருஷ்டி செய்தது.




भूमन् मानस बुद्धयहंकृति मिलच्चित्ताख्य वृत्यन्वितं
तच्चान्तःकरणं विभो तव बलात् सत्त्वांश एवासृजत् ।
जातस्तैजसतो दशेन्द्रियगणः तत्तामसांशात् पुनः
तन्मात्रं नभसो मरुत्पुरपते ! शब्दोऽजनि त्वद्वलात् ||७||

பூ4மன் மானஸ புத்3த4யஹங்க்ரு'தி மிலச்சித்தாக்2ய வ்ரு'த்த்யன்விதம்'
தச்சாந்த:கரணம்' விபோ4 தவ ப3லாத் ஸத்த்வாம்'ஶ ஏவாஸ்ரு'ஜத் .
ஜாதஸ்தைஜஸதோ த3ஶேந்த்3ரியக3ண: தத்தாமஸாம்'ஶாத் புன:
தன்மாத்ரம்' நப4ஸோ மருத்புரபதே ! ஶப்3தோ3(அ)ஜனி த்வத்3வலாத் ||7||

எங்கும் நிறைந்த ஓ குருவாயூரப்பா! தங்களுடைய ப்ரேரணையினால் ஸத்வகுண ப்ரதானமான அஹங்காரம், மனோ புத்தி அஹங்காரங்களுடன் கூடின சித்தம் என்ற வருத்தியோடு (a) கூடிய ஸாத்விக அஹங்காரத்தைத் தோற்றுவித்தது. அதுபோல், தைஜஸாஹங்காரம் பத்து இந்திரியங்களைத் தோற்றுவித்தது. தாமஸ அஹங்காரமானது ஆகாசத்தின் ஸூக்ஷ்மாம்சமான சப்தத்தை உண்டு பண்ணியது. ஓ குருவாயூரப்பா! இவை யாவும் தங்கள் ப்ரேரணையினாலேயே ஆகும்.

(தொடரும்....)

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

### ||ஸிவபக்தி கல்பலதிகா||

ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாள்



त्राता दयाजलनिधिः स्मृतिमात्रलभ्यः
क्षन्तागसामिति भवद्यशसा हृतात्मा ।

स्वामस्मरन् बत मलीमसतामलज्जो भक्तिं
भवत्यभिलषामि धिगस्तु यन्माम् ।।

த்ராதா த³யாஜலநிதி⁴: ஸ்ம்ரு’திமாத்ரலப்⁴ய:
க்ஷந்தாக³ஸாமிதி ப⁴வத்³யஶஸா
ஹ்ரு’தாத்மா |

ஸ்வாமஸ்மரன் ப³த மலீமஸதாமலஜ்ஜோ
ப⁴க்திம்’ ப⁴வத்யபி⁴லஷாமி தி⁴க³ஸ்து
யன்மாம் ||

காப்பாற்றுபவர் ! கருணைக்கடல் நினைத்த மாத்திரத்தில் கிடைப்பவர்,. பாபத்தை மன்னிப்பவர் என்றெல்லாம் உமது புகழால் உள்ளம் பறிபோன நான் என்னுடைய பாப அழுக்காகிற குறைகளை மறந்து, வெட்கம் (நாணம்) இன்றி உம்மிடம் பக்தியை விரும்புகிறேன் (என்ற எது உண்டோ அதை நினைத்தால்) நிந்திக்கத்தக்க செயல் (என்று தோன்றுகிறது) (8)



शर्माप्तिरार्तिविहतिश्च भवत्प्रसादं शम्भो विना न हि नृणां स च नान्तरा याम्।

यस्यां विधिः श्वभुगपि क्षमते समं तां त्वद्भक्तिमिच्छतु न कः स्वविनाशभीरुः ।।

ஶர்மாப்திரார்திவிஹதிஶ்ச ப⁴வத்ப்ரஸாத³ம்’ ஶம்போ⁴ வினா ந ஹி ந்ரு’ணாம்’ ஸ ச
நாந்தரா யாம் |

யஸ்யாம்’ விதி⁴: ஶ்வபு⁴க³பி க்ஷமதே ஸமம்’ தாம்’ த்வத்³ப⁴க்திமிச்ச²து ந க:
ஸ்வவிநாஶபீ⁴ரு: ||

சிவபெருமானே ! இன்பம் பெறுவது துன்பம் அழிந்து போவது என்பதும் உமது அருள் இல்லாமல் மனிதர்களுக்கு கிடையாதல்லவா அதுவும் உன்னிடம் பக்தியில்லாமல் கிட்டாது. எதனை அடைய எந்த பக்தியில் ப்ரம்மாவும் நாய் மாமிசம் உண்ணும் புலையனும் சமத்தகுதி உள்ளவர்களோ அதை தன் அழிவை கண்டு பயப்படுகிற எவன்தான் விரும்பாமல் இருப்பான் ? (விரும்புவான் என்று பொருள்) (9) (தொடரும்…) Our Mail ID : Info@voiceofjagadguru.com


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

## सन्ध्यावन्दनम्

ஸந்த்⁴யாவந்த³னம்

[சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அருளிய விளக்கங்களுடன்]

तमेव विदित्वाऽतिमृत्युमेति (श्वेताश्वतरोपनिषद् ६.१५)

தமேவ விதி³த்வா(அ)திம்ரு’த்யுமேதி (ஶ்வேதாஶ்வதரோபநிஷத்³ **6.15**)



"பரம்பொருளை அறிந்து மரணத்தை மீறிப் போகிறான்" என்பது போன்ற வேத உபதேசங்களும்,

एतद्बुद्ध्वा बुद्धिमान्स्यात्कृतकृत्यश्च भारत (भगवद्गीता १५.२०)

ஏதத்³பு³த்³த்⁴வா பு³த்³தி⁴மான்ஸ்யாத்க்ரு’தக்ரு’த்யஶ்ச பா⁴ரத (ப⁴க³வத்³கீ³தா **15.20**)

"பாரதனே! இதனை அறிந்து புத்திமானாகவும், செய்ய வேண்டியதைச் செய்தவனாகவும் ஆவான்" என்பதைப் போன்ற (பகவத்கீதை மற்றும் வேதத்தின் உபதேசங்களை முழுதும் பின்பற்றி முனிவர்களால் இயற்றப்பட்ட ஏனைய) ஸ்ம்ருதி வாக்கியங்களும் ஆத்ம ஞானம் என்னும் ஒரே வழியின் மூலம் தான் ஒரு மனிதன் செய்ய வேண்டியதைச் செய்தவன் ஆவான் என்று தெரிவிக்கின்றன. அக்ஞானம் என்கிற இருளால் சூழப்பட்ட நம்முடைய இதயத்தில் ஆத்மஞானமானது ஒளி வீச வேண்டுமென்றால் நம்மில் ஸாதன சதுஷ்டயம் பிறந்து வளர வேண்டும் என்பது மிகவும் தேவையாகிறது.(விவேகம், வைராக்யம், ஸமதமாதி ஷட்க ஸம்பத்தி, முமுக்ஷுத்வம் ஆகிய இவை நான்கும் ஸாதன சதுஷ்டயம் என்று அழைக்கப் படுகின்றன). 'ஸம தமாதி ஷட்க ஸம்பத்தி' என்றால் மன அடக்கம், புலனடக்கம், கார்யங்களை விடுவது, பொறுமை, ஸ்ரத்தை, மன ஒருநிலைப்பாடு ஆகியன. 'முமுக்ஷுத்வம்' என்றால் மோக்ஷத்தில் விருப்பம். ஸாதன சதுஷ்டயம் மனதின் அழுக்கைப் போக்குவதற்குத் தேவைப்படுகின்றது.

ஸ்ம்ருதி,

कषाये कर्मभिः पक्के ततो ज्ञानं प्रवर्तते (ब्रह्मसूत्रभाष्य ३.४.२६)

கஷாயே கர்மபி⁴: பக்கே ததோ ஜ்ஞானம்’ ப்ரவர்ததே (ப்³ரஹ்மஸூத்ரபா⁴ஷ்ய **3.4.26**)

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

' (இந்தச் செய்யுட் பகுதி ப்ரஹ்ம ஸூத்ரம் 3.4.26 க்கான பகவத்பாதாளின் பாஷ்யத்தில் 'ஸ்ம்ருதி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது).

மனத்தின் அழுக்கைக் கர்மாவினால் எடுத்துவிட்ட பிறகு ஞானம் ஏற்படுகிறது என்று கூறி (ஸாதன சதுஷ்டயம் ஸித்திப்பதற்கு முன்பு நாம் நாட வேண்டிய) ஞானத்தின் ஸாதனத்தைத் தெரிவிக்கின்றது. மனதைச் சுத்தப்படுத்தும் வழி உசிதமான கர்மாக்களைச் செய்வதாகும். கர்மாக்களைச் செய்வதற்கு அவைகளின் தன்மையைத் தெரிந்துகொள்ளவேண்டும். செய்ய வேண்டிய கர்மாக்கள் வேதங்களால் தெரிவிக்கப்பட்டவை என்பதால் அவைகளைப் பற்றி வேதங்களின் மூலமாகத்தான் தெரிந்துகொள்ள முடியும். வேதத்தில் சொல்லப்பட்டவற்றை வேதத்தை அத்யயனம் செய்துதான் தெரிந்துகொள்ளலாம். உபநயனம் எவனுக்கு ஆகியிருக்கின்றதோ அவன்தான் அத்யயனம் செய்யலாம். உபநயனம் ஆன காரணத்தால் ப்ரஹ்மச்சாரிக்கு ஏதாவது தகுதியும் கடமையும் ஏற்பட வேண்டும். அவன் அத்யயனம் செய்வதற்குத் தகுதியுள்ளவன் ஆகிறான். விளக்கைப் போன்று எல்லாவற்றையும் தெளிவு செய்யும் வேதத்தை அத்யயனம் செய்வதற்குத் தகுதியுள்ளவன் அங்கு சொல்லப்பட்டவையான மனதைச் சுத்தப்படுத்தும் கர்மாக்களைச் செய்வதற்குத் தகுதியுள்ளவன் ஆகிறான். கர்மாக்களைச் செய்வதற்குத் தகுதியுள்ளவன் ஆகிறான் என்றால் எல்லாக் கர்மாக்களையும் செய்வதற்குத் தகுதி பெறுகிறான் என்று அர்த்தமில்லை. தனது ஆஸ்ரமத்திற்குப் பொருத்தமான கர்மாக்களைச் செய்வதற்குத் தகுதியுள்ளவன் ஆகிறான் என்று தான் அர்த்தம். இம்மாதிரி விதிக்கப்பட்ட கர்மாக்களில் ஸந்த்யாவந்தனமும் ஒன்று. வேத அத்யயனம் ப்ராஹ்மணர்களுக்கும், க்ஷத்ரியர்களுக்கும், வைய்யர்களுக்கும் விதிக்கப்பட்டதால் அத்யயனத்திற்குக் காரணமான காயத்ரீ உபதேசமும் அதற்குப் பிறகு ஸந்த்யா உபாஸனையும் செய்து கொள்வதற்கு ப்ராஹ்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைய்யர்கள் ஆகிய இவர்கட்குத் தகுதி உள்ளது என்று தீர்மானமாகின்றது. இப்போது ஸந்த்யையின் உண்மையான தன்மையை ஆராய்ந்து பார்ப்போம். (தொடரும்...)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்